www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# நாடார் சரசுவதி மேல்நிலைப்பள்ளி.

## இடைப் பருவத் தேர்வு – 2024

## பதினொன்றாம் வகுப்பு 'தமிழ்'.

மதிப்பெண் : 50
காலம் : 90 நி.

I **பலவுள் தெரிக :** 5×1=5

1. பாயிரம் இல்லது ____ அன்றே.

அ) காவியம் ஆ) பாடல் இ) பனுவல் ஈ) கவிதை.

2. மொழி முதல் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடி.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்.
இ) ரூபாய், லட்டு ஈ) றெக்கை, அங்ஙனம்.

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன.

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்.

4. இறகுகளின் தொகுப்பு ____.

அ) பறவை ஆ) இறக்கை இ) சிறகு ஈ) உடல்.

5. ஆய்த எழுத்து சொல்லின் ____ வரும்.

அ) முதலில் ஆ) இடையில் இ) ஈற்றில் ஈ) மூன்றிடத்தும்.

II **எவையேனும் ஐந்தனுக்கு விடையளி :** 5×2=10

6. தமிழ் நாட்டின் மாநில மரம் சிறு குறிப்பு வரைக.

7. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது ?

8. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன் ?

9. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

10. குற்றியலுகரப் புணர்ச்சியைச் சான்று தந்து விளக்கு.

11. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

III எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி: $3 \times 4 = 12$

12. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – உன் கருத்தை எழுது.

13. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

14. மொழி முதல் எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எ.டு தருக.

15. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

IV எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி: $5 \times 2 = 10$.

16. பகுபத உறுப்பிலக்கணம் தருக:
 வைத்தார் (அல்லது) ஈன்ற.

17. புணர்ச்சி விதி தருக.
 செங்கயல் (அல்லது) அணிந்துரை

18. இலக்கணக் குறிப்பு தருக.
 அ) மாநகர் ஆ) வெண் சங்கு.

19. தமிழாக்கம் தருக.
 அ) Knowledge rules the world.
 ஆ) A picture is worth a thousand words.

20. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று.
 அ) காலங்காத்தால எந்திரிச்சுப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
 ஆ) நேத்து ஒன்னப் பாத்தேன்.

21. கலைச்சொல் தருக அ) FERTILIZERS ஆ) HARVESTING.

V எவையேனும் இரண்டனுக்கு விடையளி $2 \times 5 = 10$

22. 'சுற்றுச் சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' – என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

23. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

24. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து அறிந்தவற்றைத் தொகுத்து எழுது.

VI 25. 'ஏடு தொடக்கி வைத்த' எனும் பாடலை அடி பிறழாமல் எழுது $1 \times 3 = 3$.

~x~x~x~

www.Padasalai.Net